# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,925—1970 සැප්තැම්බර් 25 වැනි සිකුරාදා—1970.9.25

14,925 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதற்காக தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 529 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 531 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 532 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 535 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாஜிஸ்திரேட்களுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 532 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*1970 இன் இல. 311*

*என். டி. 21/ஆர்ஈசிரி/470*

### தரைப்படை — நிரந்தரப்படை — அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றமும் இளைப்பாறலும்

*பதவி ஏற்றம்*

*கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1968, ஒற்றோபர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து கேணல் ஆகக் கடவர் :*

*லெவ்ரினன்ற்—கேணல் (தற்காலிக கேணல்) கந்தையா ராஜயோகம், சி. ஈ.*

*இளைப்பாறல்*

*கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970, நவெம்பர் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து தரைப்படையின் நிரந்தரப்படையிலிருந்து இளைப்பாறுகிறார் :*

*கேணல் கந்தையா ராஜயோகம்*

*அதி உத்தமருரின் ஆணைப்படி,*

*டபிள்யூ. ரி. ஜயசிங்ஹ,*
*பதில் நிரந்தரச் செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு.*
*1970. செத்தெம்பர் 12*

*9-996*

*1970 இன் இல. 312*

*என். டி. 21/ஆர்ஈசிரி/448*

### தரைப்படை — நிரந்தரப்படை — அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றமும் இளைப்பாறலும்

*பதவி ஏற்றம்*

*கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர் 1970, யூலை மாதம் 2 ஆம் திகதியிலிருந்து மேஜர் ஆகக் கடவர் :*

*கப்ரின் (தற்காலிக மேஜர்) ஜோசெப் றெகி எமானுவெல் பரம்சோதி, சி. எஸ். ஐ.*

*இளைப்பாறல்*

*கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970, ஓகத்து மாதம் 25 ஆம் திகதியிலிருந்து தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறினர் :*

*மேஜர் ஜோசெப் றெகி எமானுவெல் பரம்சோதி, சி. எஸ். ஐ*

*இவ்வலுவலரின் இளைப்பாறல் தொடர்பாக 1970, யூலை மாதம் 10 ஆம் திகதிய 14,914 ஆம் எண்கொண்ட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1970 ஆம் ஆண்டின் 207 ஆம் எண்கொண்ட அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.*

*அதி உத்தமருரின் ஆணைப்படி,*

*டபிள்யூ. ரி. ஜயசிங்ஹ,*
*பதில் நிரந்தரச் செயலாளர்,*
*பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு.*
*1970, செத்தெம்பர் 14*

*9-997*

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்த மானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அழுத்தகர் திணைக்களம்*
*கொழும்பு,*
*1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் வ.*

*எல். டபிள்யூ. பி. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

1970 இன் இல. 313

என். டி/விளவ்/17/ஏ(VI)

**தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றம்**

1970 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் பிறெவே-லெவ்ரினன்ற்-கேர்னல் ஆகக் கடவர் :

மேஜர் ரணசிங்ஹ பண்டா வணிசேகர நாரந்பனுவ, ஈடி, சிசிசி

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்ஹ,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு.
1970, செத்தெம்பர் 12.

9-943

---

1970 இன் இல. 314

என். டி/விளவ்/9/ஏ.

**தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தொண்டர் படையின் பொது ஒதுக்கப்படைக்கான மாற்றம்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர், 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து இலங்கை தொண்டர் படையின் பொது ஒதுக்கப்படைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேஜர் பிராங்க் நாணயக்கார, சி. ஏ. எஸ். சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 10.

9-899

---

1970 இன் இல. 315

என். டி/விளவ்/2/ஏ(III)

**தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தொண்டர் படையின் பொது ஒதுக்கப்படைக்கான மாற்றம்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆம் திகதியிலிருந்து இலங்கை தொண்டர் படையின் பொது ஒதுக்கப்படைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கப்ரின் ரவீந்திர விஹால் ஜயவர்த்தன, சி. எல். ஐ.

அதி உத்தமனுரின், ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 10.

9-898

---

1970 இன் இல. 316

என்.டி/விளவ்/33/ஏ(II)

**தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றம்**

1970 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் லெவ்ரினன்ற் ஆகக் கடவர் :

செக்கன்ட் லெவ்ரினன்ற் மொஹமெட் இஸ்மாயில் மீராசாஹிப் பாரூக், ஜீ. டபிள்யூ.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்ஹ,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு.
1970, செத்தெம்பர் 12.
9-946

---

1970 இன் இல. 317

என். டி /விளவ்/51/ஏ

**தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றங்கள்**

1970 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் லெவ்ரினன்ற்ஸ் ஆகக் கடவர் :

செக்கண்ட்—லெவ்ரினன்ற் துமித்த பிரசன்ன தேஜஸ்லின் தர்மபால, ஜீ. டபிள்யூ.

செக்கண்ட்—லெவ்ரினன்ற் அமர விஜேவீர குணரத்ன, ஜீ. டபிள்யூ.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்ஹ,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 12.

9-941

---

1970 இன் இல. 318

என். டி/விளவ்/10/ஏ(II)

**தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணை அமர்வும் மாற்றமும்**

கீழ்க் குறிப்பிடப்பெற்ற உவாறன்ற் ஓபிசரை 1970, செத்தெம்பர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து தரைப்படையின் தொண்டர் படையில் லெவ்ரினன்ற் (குவாட்டர் மாஸ்ரர்) ஆக அரசாணை அமர்வு செய்தலையும் இலங்கைத் தரைப்படை வைத்தியச் சிறப்பணியின் (தொண்டர்) படைக்கு மாற்றம் செய்தலையும் அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் அங்கீகரிப்பதில் களிப்படைந்துள்ளார்.

1040 உவாறன்ற் ஓபிசர் II ஜோசெப் செல்வேரியஸ் கொடமுனே

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்ஹ,
பதில் நிரந்தரச் செயலாளா,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 12.

9-942

---

1970 இன் இல. 319

என். டி. 22/ஆர்ஈசிரி/184

**இலங்கை அரச கடற்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் இலங்கை அரச கடற்படையின் நிரந்தர கடற்படையிலிருந்து 1971, சனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து இளைப்பாறுகிறார்.

லெவ்ரினன்ற்—கொமான்டர் எ. பி. ஹென்றிக்கஸ், இலங். அ. க.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்ஹ,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 13.
9-998

# நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 321

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. எம். பி. விஜசிங்க .. | இலங்கை நீதிச்சேவையில் உத்தியோகத்தர் ஒருவர், தகுதிகாண்நிலை மூன்று வருடங்கள் | 1970 ஓகஸ்ட் 1 லிருந்து .. | மறு அறிவித்தல் வரை |
| திரு. கே. ஜே. ஜே. பெரேரா .. | மேலதிக நீதிவான், கண்டி—பதுளை, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 செப்ரெம்பர் 12 லிருந்து 16 வரை | அல்லது மறு அறிவித்தல் வரை |
| திரு. ரி. எஸ். பி. டீ. எஸ். குணசேகர .. | மேலதிகமாவட்ட நீதிபதி முதலியன, பலப்பிட்டி | 1970 செப்ரெம்பர் 30 லிருந்து ஒக்டோபர் 2 வரை | திரு. ஏ. டபிள்யு. குணரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. எம். ஓ. எம். தாஹிர் .. | மேலதிக நீதிவான் முதலியன, குருணகல் | 1970 செப்ரெம்பர் 1 .. | திரு. கே. வி. சுவாமிநாதபதி இல்லாத காலம் |
| திரு. எம். ஓ. எம். தாஹிர் .. | ஷை .. | 1970 செப்ரெம்பர் 13 .. | திரு. டபிள்யு. என். எஸ். விஜரட்ண இல்லாத காலம் |
| திரு. கே. வி. நடராஜா .. | மேலதிக நீதிவான் முதலியன, பதுளை.. | 1970 செப்ரெம்பர் 7 லிருந்து 14 வரை | திரு. ரி. டி. ஜி. டீ அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. பி. மகேஸ்வரன் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, நுவரேலியா | 1970 செப்ரெம்பர் 14 .. | திரு. ஜே. பி. சி. சுவரிஸ் இல்லாத காலம் |
| திரு. கே. ஈ. கதிர்காமலிங்கம் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, யாழ்ப்பாணம் | 1970 செப்ரெம்பர் 12 .. | திரு. ஆர். பரமகுரு இல்லாத காலம் |
| திரு. ஆர். விக்ரமசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, காலி.. | 1970 செப்ரெம்பர் 27, 28, 30 | திரு. எல். எச். ஜி. வீரசேகர இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். சுரவீர .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, கேகாலை | 1970 செப்ரெம்பர் 9 .. | திரு. கே. சி. ஈ. டீ அல்விஸ் இல்லாத காலம் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, சிலாபம்—புத்தளம் | 1970 செப்ரெம்பர் 9, 10 .. | திரு. எம். ஏ. எம். உசேன் இல்லாத காலங்கள் |
| திரு. எச். ஜி. பண்டிதசேகர - .. | ஷை .. | 1970 செப்ரெம்பர் 11 லிருந்து 13 வரை | ஷை |
| திரு. எம். ஜே. பீரிஸ் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பதுளை | 1970 செப்ரெம்பர் 14 லிருந்து 18 வரை | திரு. ரி. டி. ஜி. டீ அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். இளையதம்பி .. | யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் மல்லாகம் முதலிய இடங்களில் | 1970 செப்ரெம்பர் 11 லிருந்து 13 வரை | திரு. எஸ். ஆனந்தகுமாரசுவாமி இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. சிவகுருநாதன் .. | மேலதிக விண்ணப்பநீதிமன்ற ஆணையாளர் முதலியன, கொழும்பு | 1970 செப்ரெம்பர் 9 .. | திரு. என். தெவேந்திரா இல்லாத காலம் |
| திரு. எம். எம். அபுர்தாஹிர் .. | மேலதிக நீதவான் முதலியன, மன்னார் | 1970 ஓகஸ்ட் 30 லிருந்து செப்ரெம்பர் 1 வரை | திரு. கே. வி. நவரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. பி. வி. சேனாதிருஜா .. | மேலதிக நீதவான் முதலியன, வவுனியா | 1970 செப்ரெம்பர் 21, 22 .. | திரு. கே. சின்னத்தம்பி இல்லாத காலங்கள் |
| திரு. ஐ. பெர்னான்டோ .. | பிற்றிகல்கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 16 லிருந்து 18 வரை | திரு. பி. ஜே. எஸ். ஏ. பெரேரா இலலாத காலங்கள் |
| திரு. எஸ். ஏ. ஈ. பின்ரோ .. | ஷை .. | 1970 செப்ரெம்பர் 19, 20 .. | ஷை |
| திரு. கே. வீரதுங்க .. | வெல்லபோடப்பற்று முதலியவற்றின ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 4 லிருந்து 6 வரை | திரு. பி. ஓ. ஆர். விஜயதிலக்க இல்லாத காலங்கள் |
| திரு. எச். டபிள்யு. டி. என். வெதசிங்க .. | கடவத்தக் கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 17, 18 .. | திரு. டபிள்யு. குணவத்தன இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. ஈ. இலங்கன்திலக்க .. | தும்பனே முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 13 .. | திரு. எ. பி. அலுவிகார இல்லாத காலம் |
| திரு. ஏ. சி. ஜாபர் .. | கரவக்குப்பற்று ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 23 லிருந்து 25ம், 27ம், 28ம் | திரு. கே. நாகலிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. பி. வி. சேனாதிருஜா .. | வவுனியாதெற்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 18 லிருந்து 21 வரை | திரு. கே. சின்னத்தம்பி இல்லாத காலங்கள் |
| செல்வி ஐ. எம். எஸ். தொடகும்புர .. | அட்டக்களன் கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 1 .. | திரு. சி. பி. உனுகும்புர இல்லாத காலம் |

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. கே. ஏ. பிரேமதிரட்ண .. | அளுக்குருக்கோறளை முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 5 லிருந்து 7 வரை | திரு. எம். ஏ. சி. டீ சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. ஈ. இலங்கன்திலக்க .. | பாததும்புர முதலியவற்றின் ஊர்நீதி மன்ற மேலதிக தலைவர் | 1970 செப்ரெம்பர் 19 லிருந்து | வலள்ள ஊர் நீதிமன்ற 6251 இலக்க குற்றவியல் வழக்கை விளங்கித் தீர்ப் பளிப்பதற்கு |
| திரு. என். எதிரிசிங்க .. | நுவரகம்பலாத்த முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 4 .. | திரு. பி. எஸ். விக்ரமசிங்க இல்லாத காலம் |
| திரு. ஏ. டபிள்யு. ஏ. எமானுஎல் .. | குளியப்பிட்டி காரியதிகாரப்பிரிவு முத லியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 6, 7 .. | திரு. எஸ். கடவத்த ஆராச்சி இல்லாத காலங்கள் |
| திரு. எம். எச். எம். ஜவ்வர் .. | பாணமைப்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில்க தலைவர் | 1970 செப்ரெம்பர் 11, 12 .. | திரு. எஸ். ருஜனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. ஜி. சூரிய ஆராச்சி .. | தேவ மெதி அற்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 6, 7 .. | திரு. சி. ஏ. எஸ். ஒறிஸ் பின் இல்லாத காலங்கள் |
| திரு. எச். ஆர். பி. அபேவிக்ரம .. | தெசிகம்பல் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 5 .. | செல்வி எஸ். தர்மதாச இல்லாத காலம் |
| திரு. சி. குமரகே . | டிை .. | 1970 செப்ரெம்பர் 4, 6 .. | டிை |
| திரு. ஜி. சூரிய ஆராச்சி . | கல்கமுவ காரியதிகாரப்பிரிவு முதலிய வற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஓகஸ்ட் 30 .. | திரு. எம். எம். பெரேரா இல்லாத காலம் |

சிறிமேவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573,
கொழும்பு 12, 1970 ந் ஆண்டு செப்ரெம்பர் மீ 17 ந் உ.
9–1023/2

---

1970 ஓகஸ்ட் 30 லிருந்து 1970 செப்ரெம்பர் 1 வரை திரு. கே. வி. நவரட்ணம் இல்லாத காலத்திற்கு மன்னர் மேலதிக நீதவான் முதலியன வாக நியமிக்கப்பட்ட திரு. ஏ. சீமாம்பிள்ளையின் நியமனம் நீக்கப்பட்டுள்ளது.

சிறிமேவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573, கொழும்பு 12,
1970 ந் ஆண்டு செப்ரெம்பர் மீ 17 ந் உ.

9–1023/1

---

# மற்றைய நியமனங்களும் பிறவும்

*1970 இன் இல. 322*

## காணி அபிவிருத்திச் சட்டப்பிரமாணம்
## (320 ன் கீழ் அறிவித்தல்)

*காணி அபிவிருத்திச் சட்டப்பிரமாணம் 6 (1) ம் பிரிவின் கீழ் கௌரவ கமத்தொழில், காணி அமைச்சர், இ. நி. சே. III, ஆனந்த மாதன அவர்களை அவருடைய கடமைகளுடன் மேலதிக மாக காணி உத்தியோகத்தராக கண்டி மாவட்டத்தில் 1970.8.20 ம் திகதியிலிருந்து நியமித்துள்ளார்.*

*ஆர். ரி. ரணதுங்க,*
*மேலதிக நிரந்தரச் செயலாளர்,*
*கமத்தொழில், காணி அமைச்சு.*

*9-900/2*

---

*1970 இன் இல. 323*

## காணி அபிவிருத்திச் சட்டப்பிரமாணம்
## (320 ன் கீழ் அறிவித்தல்)

*காணி அபிவிருத்திச் சட்டப்பிரமாணம் 6 (1) ம் பிரிவின கீழ் கௌரவ கமத்தொழில், காணி அமைச்சர் இ. நி. சே. IV, கே. வி. ஏக்கநாயக்கா அவர்களை அவருடைய கடமைகளுடன மேல திகமாக காணி உத்தியோகத்தராக கண்டி மாவட்டத்தில் 1970. 8. 20 ம் திகதியிலிருந்து நியமித்துள்ளார்.*

*ஆர். ரி. ரணதுங்க,*
*மேலதிக நிரந்தரச் செயலாளர்,*
*கமத்தொழில், காணி அமைச்சு.*

*9-900/1*

---

# அரசாங்க அறிவித்தல்கள்

*இல. இடி 25/023.*

## *அரச ஈட்டு வங்கிப் பணிப்பாளர் பதவி*

*கௌரவ நிதி அமைச்சர், இலங்கை அரச ஈட்டு வங்கிக் கட் டளைச் சட்டத்தின் 10, 13 (2) ஆம் பிரிவுகளின் கீழ் தமக்குரித் தாக்கப்பட்ட தத்துவத்தின் பண்பால், திரு. ஏச். ஜி. சோமபண்ட அவர்களை 1970, செத்தெம்பர் மாதம் 11 ஆந் தேதியிலிருந்து அரச ஈட்டு வங்கியின் பணிப்பாளராக நியமித்துள்ளார்.*

*பி. சி. முனசிங்ஹ,*
*நிதி அமைச்சரின் நிரந்தரச்*
*செயலாளருக்காக.*

*அமைச்சு அலுவலகம்,*
*கொழும்பு,*
*1970, செத்தெம்பர் மாதம் 17 ஆந் தேதி.*
*9-983*

---

## *முத்திரைக் கட்டளைச் சட்டம்*

*முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் (247 ம் அத்தியாயமான) 6 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினாலாக்கப்பட்ட விதி.*

*பதில் நிதியமைச்சர்.*

*கொழும்பு, 16. 9. 1970.*

### விதி

*முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் (247 ஆம் அத்தியாயமான) 6 ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு ஓகத்து 5 ஆம் தேதிய 14,707 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 1970 ஆம் ஆண்டு ஆகஸ்டு 28 ஆம் திகதிய 14,921 ஆம் இலக்க வர்த்தமானியில் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான விதியானது அதற்கான அட்டணையில் 81 ஆம் அம்சத்தை உடனடுத்துப் பின் வரும் புதிய அம்சங்களை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.*

> *" 82. காலஞ் சென்ற பிரதம மந்திரி கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் உருவப் படத்தை உள்ளடக்கிய மக்கள் வெற்றி அணியைக் குறிக் கும் 10 சதப் பெறுமதியுடைய அஞ்சல் இறைவரி முத்திரைகள்."*

*9-945*

---

## *அஞ்சலலுவலகக் கட்டளைச் சட்டம்*

*அஞ்சலலுவலகக் கட்டளைச் சட்டத்தின் (190 ஆம் அத்தியாயத் தில்) 16 ஆம் பிரிவின் கீழ் அஞ்சற்தந்தித் தொடர்புகள் அமைச் சரினாலாக்கப்பட்ட விதி.*

*செ. குமாரசூரியர்,*
*அஞ்சற்தந்தித் தொடர்புகள் அமைச்சர்.*

*கொழும்பு, 16. 9. 1970.*

விதி

அஞ்சலலுவலகக் கட்டளைச் சட்டத்தின் (190 ஆம் அத்தியாயமான) 16 ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு ஓகஸ்து 5 ஆம் தேதிய 14,707 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்டு 28 ஆம் தேதிய 14,921 ஆம் இலக்க வர்த்தமானியில் கடைசியாக திருத்தப்பட்டதுமான விதியானது அதற்கான அட்டவணையில் 82 ஆம் அம்சத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அம்சங்களை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

> "83. காலஞ் சென்ற பிரதம மந்திரி கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் உருவப்படத்தை உள்ளடக்கிய மக்கள் வெற்றி அணியைக் குறிக்கும் 10 சதப் பெறுமதியுடைய அஞ்சல் இறைவரி முத்திரைகள்."

9-947

---

## 1958 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபன சட்டம்

1961 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, 1964 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபனத்தின் (திருத்த) சட்டங்களால் திருத்தப்பட்டவாருன, 1958 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, துறைமுக (சரக்கு) க் கூட்டுத்தாபன சட்டத்தின் 59 ஆம் பிரிவினால் தனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, 1970 செத்தெம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் 6 மாத காலத்திற்கு தொழில் மேன்முறை மன்றம் அமைப்பதற்கு காலி, ஙிறிம்புருவிலுள்ள திரு. ஈ. ஏ. விஜயசூரியா அவர்களை கௌரவ கப்பற் போக்குவரத்து, சுற்றுலாப் பிரயாண அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் மீண்டும் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பி. பீ. கரந்தவல,
நிரந்தரச் செயலாளர்.

கப்பற் போக்குவரத்து, சுற்றுலாப் பிரயாண அமைச்சு,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ.

9–836

---

## தபால் தந்தி நலன்புரி கழகம்

### கட்டளைச்சட்டம்

(286 ஆம் அத்தியாயமான) தபால், தந்தி நலன்புரி கழகக் கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் தபால், தந்தி நலன்புரி கழகத்தால் ஆக்கப்பட்டதும், அப்பிரிவுன் பிரகாரம், நிதி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பேரில், அவரால் உறுதிப்படுத்தப் பட்டதுமான விதி.

சி. ஏ. குறே,
நிதி அமைச்சு,
நிரந்தரச் செயலாளருக்காக.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 12 ந் உ.

விதி

1949 ஆம் ஆண்டு சனவரி மாதம் 7 ஆந் தேதியைக் கொண்ட 9,936 ம் இல. அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 1969 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 5 ஆந் தேதியைக் கொண்ட 14,883 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமான விதியின் மூலம், கடைசி முறையாகத் திருத்தியமைக்கப்பட்டதுமான, தபால் தந்தி நலன்புரி கழகத்து விதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தியமைக்கப் படுகின்றன :

1. 1 ஆவது அதிகாரத்தின் 7(1) ஆவது விதியிலே, உள்ள "உபகாரச்சம்பளமுறையை" என்ற சொல்லுக்குப் பதிலாக "நிரந்தரமான" என்ற சொல்லை இடுவதாலும் ;
2. 1 ஆவது அதிகாரத்தின் 9(1) ஆவது விதியிலே உள்ள, "ரூபா 2" என்ற சொற்றொடரை நீக்குவதாலும் ;
3. 1 ஆனது அதிகாரத்தின் 11 (ஆ) ஆவது விதிக்குப் பதிலாக பின்வரும் புதிய விதியை இடுவதாலும்—

> "(ஆ) அங்கத்தவர் ஒருவர் இறக்கும்போது, கூட்டுத்தாபனத்திலே அங்கத்துவம் வகிக்கும் எல்லா அங்கத்தவரிடமிருந்தும், ஒவ்வொரு அங்கத்தவரிடமிருந்தும் 1 ரூபா வீதம் கணிக்கப்பட்டு பெறப்படும் நன்கொடை ஒன்று, 2 ஆவது பந்தியின் பிரகாரம், அத்தகைய தொகையையும் நன்கொடையையும் பெற உரிமையுள்ள நபருக்கு அல்லது நபர்களுக்கு, மேற்படி (அ) பந்தியின் பிரகாரம், கழகத்துக்குக் கொடுக்கப்பட வேண்டிய மேற்படி தொகையேதுமிருப்பின், அது அத்தொகையிலிருந்தும் நன்கொடையிலிருந்தும் கழிக்கப்பட்ட பின், அங்கத்தவர் இறப்பு பற்றி, அத்தகைய நபர் அல்லது நபர்கள், செயற்குழுவைத் திருதிப்படுத்திய மூன்று மாத காலத்துள், கட்டப்படும்."

4. 1 ஆவது அதிகாரத்தின் 12(1) ஆவது விதிக்குப் பதிலாக பின் வரும் புதிய விதியை இடுவதாலும் :
   "அங்கத்தவர் ஒருவர் இறக்கும்போது கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த எல்லா அங்கத்தவர்களும், அந்த அங்கத்தவரின் சார்பிலே கொடுக்கப்படவேண்டிய நன்கொடைக்கு பங்கு கொண்டுதவ கடமைப்பட்டவராயிருப்பார்கள்."
5. 1 ஆவது அதிகாரத்தின் 12(2) ஆவது விதியிலே உள்ள "அத்தகைய நன்கொடையை கட்டுவதற்கு கடமைப்பட்டுள்ளார்" என்ற சொற்றொடரை நீக்குவதாலும் ;
6. 1 ஆவது அதிகாரத்தின் 19(2) ஆனது விதியிலே உள்ள "ரூபா 5,00,000" என்ற சொற்றொடருக்குப்பதிலாக "ரூபா 6,50,000" என்ற சொற்றொடரை இடுவதாலும் ;
7. 1 ஆவது அதிகாரத்தின் 19(3) (அ), (ஆ), (இ), (ஈ) விதியிலே உள்ள "ரூபா 300", "ரூபா 500", "ரூபா 700", "ரூபா 1,000" என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக முறையே "ரூபா 400", "ரூபா 600", "ரூபா 900" "ரூபா 1,200" என்ற சொற்றொடர்களை இடுவதாலும் ;
8. 1 ஆவது அதிகாரத்தின் 31 ஆவது விதியை 32 ஆவது விதியாக மாற்றி இலக்கமிட்டு, பின்வரும் புதிய விதியை 31 ஆவது விதியாக இடுவதாலும் ;

> "31. ஒதுக்கநிதி :
>
> நட்டங்களை ஈடு செய்வதற்காக உள்ள ஒதுக்கநிதியொன்றுக்கு, இடுக்கண் கடன்கள்மீது கிடைக்கப்பெறும் வட்டியின் நூற்றிலொரு வீதம், ஒதுக்க நிதியிலே அதன் சார்பில் கட்டப்படும் தொகை, அத்தகைய கடன்கள் மீது கொடுக்கப்படவேண்டிய தொகையின் இருப்பதிலொரு பகுதிக்கு மேற்படாது இருக்கும்வரை கணக்கு மாற்றஞ் செய்யப்படும்."

9—1003

---

கட்டளை இல. : 1

## 1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டம்

### 57 ம் பிரிவின் கீழ் கட்டளை

1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் 57 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா ஆகிய நான், கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணி, இலங்கை மின்சாரச் சபைக்குத் தேவைப்படுவதால், உத்தேசிக்கப்பட்டுள்ள காணியை எடுத்தலை இந்தக் கட்டளையால் அங்கீகரிக்கிறேன்.

மைத்திரிபால சேனநாயக்கா,
நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர்.

கு. இல. : பி. இ. 13/70—எச். டி./எல். ஏ/8,
கொழும்பு 1,
19.8.1970.

அட்டவணை

இலங்கைத் தீவின் மேற்கு மாகாணத்திலுள்ள கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் வெள்ளவத்தை வட்டாரத்திலுள்ள காலி வீதியில் அமைந்திருக்கும் மதிப்பீட்டு இலக்கம் 52 ஐ உடைய காணியின் ஒரு பகுதியான 0 ஏ. 0 று. 01·2 பேர்ச் விஸ்தீரணமும், பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டதுமான காணித்துண்டு :

வடக்கு : பிரான்சிஸ் வீதி ;

கிழக்கு : காலி வீதி ;

தெற்கு : அதே காணியின் மீதிப்பாகம் ;

மேற்கு : அதே காணியின் மீதிப் பாகம்.

உரிமை கோருபவர் : திருமதி ஏ. எச். ரி. டி. சொய்சா, 41, ஹாவத்தை வீதி, கொழும்பு.

9–1014/1

கட்டளை இல. : 2

## 1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டம்

### 57 ம் பிரிவின் கீழ் கட்டளை

1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தின் 57 ம் பிரிவினுல் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா ஆகிய நான், கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணி இலங்கை மின்சாரச் சபைக்குத் தேவைப்படுவதால், உத்தேசிக்கப்பட்டுள்ள காணியை எடுத்தலை இந்தக் கட்டளையால் அங்கீ கரிக்கிறேன்.

மை. சேனநாயக்கா,
நீர்ப்பாசன, மின்சக்தி,
பெருந்தெருக்கள் அமைச்சர்.

கு. இல. : பீ. இ. 13/70 த எச். டி./எல். ஏ./8 .
கொழும்பு–1,
19.8.1970.

#### அட்டவணை

இலங்கைத் தீவின் மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை மாவட்டத் தில் நாவுல காரியாதிகாரியின் பிரிவிலுள்ள நாலந்தை கிராமத்தில் அமைந்திருக்கும் நந்தனுவத்தை அல்லது நந்தனுதோட்டம் எனக் கூறப்படும் காணியின் ஒரு பகுதியான 1 ஏ. 0 று. 0 பேர். விஸ்தீரணமும், பின்வரும் எல்லைகளுக்குமுட்பட்டதுமான காணித்துண்டு :

வடக்கு : அதே காணியின் மீதிப் பாகம் ;
கிழக்கு : மாத்தளை–தம்புல்லை பிரசித்த வீதி, 31/8 இலக்கமுடைய மதவின் அண்மையில் ;
தெற்கு : அதே காணியின் மீதிப்பாகம் ;
மேற்கு : அதே காணியின் மீதிப்பாகம்.

உரிமை கோருபவர் : வி. சமரசுந்தர, நந்தனுவத்தை, நாலன்தா.

9–1014/2

---

## மொனருகலை நிருவாக மாவட்டத்தின் தனமல்விலவில் உள்ள வாடிவீட்டை மூடுதல்

மொனருகலை நிருவாக மாவட்டத்தின் தனமல்விலவில் உள்ள வாடி வீட்டை 1970 அக்டோபர் 1 ம் திகதியில் இருந்து மூடுவதற்குத் தீர் மானிக்கப்பட்டுள்ளதெனப் பொதுமக்களின் தகவலுக்கு இத்தால் அறி விக்கப்படுகிறது.

பி. மகாதேவா,
நிரந்தரச் செயலாளர்,
பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 7,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 11 ந் உ.

9–839

---

## சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவின்படி, தென்னை வளர்த்தற் தொழிற் சம்பளச சபையால் ஆக்கப் பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள் தொழில் அமைச்சரால அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென்று மேற்கூறிய சட்டத்தின் 29(3) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

இத்தீர்மானங்கள் 1970 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் தேதி யன்று நடைமுறைக்கு வரும்.

ஏ. ஈ. கோகர்லி மொறகொட,
பதில் நிரந்தரச் செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 13 ந் உ.

#### அட்டவணை

தென்னை வளர்த்தற் தொழிற் சம்பளச சபையால ஆக்கப்பட்டு, 1949 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 30 ந் தேதியன்று வெளிவந்த 9,971 ம் இல. அசாதாரண வர்த்தமானியிற் பிரசுரமான அறிவித்தலி னகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டு, காலத்திற்குக் காலம் மாற்றப்பட்ட தீர்மானங்கள், அதனகத்தேயுள்ள அட்டவணையில் மேலும் பின்வருமாறு மாற்றப்படுதல் வேண்டும் :—

(1) அவ் வட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள III அ—ம் பாகத்திற்குப் பதி லாக, பின்வரும் புதிய III அ—ம் பாகத்தை இடுவதன் மூலம் :—

" III அ—ம் பாகம்

இதனடியிற் காணப்படும் I ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள தொழி லாளருக்கு நேரவேலைக்குரிய கீழெல்லைச் சம்பள வீதம் II ம் பத்தியில் முறையே அதற்கெதிரே குறிக்கப்பட்டுள்ள வீதமாகும்.

| I ம் பத்தி<br>தொழிலாளரின் வகுப்பு | II ம் பத்தி<br>சம்பள வீதம் |
|---|---|
| பின்வருவனவற்றில் தொழிலாற்றும் கண்டாக்டர் : | |
| (அ) 75 ஏக்கருக்குக் குறையாததும் ஆனல் 100 ஏக்கருக்குக் குறைந்ததுமான நிலப்பரப்பை யுடைய தென்னந் தோட்டம் அல்லது அத னகத்தேயுள்ள பகுதி யாதாயினும் | மாதமொன்றுக்கு ரூபா 125/– |
| (ஆ) 100 ஏக்கருக்குக் குறையாததும் ஆனல் 150 ஏக்கருக்குக் குறைந்ததுமான நிலப்பரப்பை யுடைய தென்னந் தோட்டம் அல்லது அத னகத்தேயுள்ள பகுதி யாதாயினும் | மாதமொன்றிற்கு ரூபா 150/– |
| (இ) 150 ஏக்கருக்குக் குறையாததும் ஆனல் 200 ஏக்கருக்குக் குறைந்ததுமான நிலப்பரப்பை யுடைய தென்னந் தோட்டம் அல்லது அதனகத்தேயுள்ள பகுதி யாதாயினும் | மாதமொன்றிறகு ரூபா 175/– |
| (ஈ) 200 ஏக்கருக்குக் குறையாததும் ஆனல் 250 ஏக்கருக்குக் குறைந்ததுமான நிலப்பரப்பை யுடைய தென்னந் தோட்டம் அல்லது அத னகத்தேயுள்ள பகுதி யாதாயினும் | மாதமொன்றுக்கு ரூபா 200/– |
| (உ) 250 ஏக்கருக்குக் குறையாத நிலப்பரப்பை யுடைய தென்னந் தோட்டம் அல்லது அத னகத்தேயுள்ள பகுதி யாதாயினும் | மாதமொன்றுக்கு ரூபா 225/– |

2. அவவட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள V ம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய V ம் பாகத்தை இடுவதன் மூலம் :—

" V ம் பாகம்

வேலைக்கமர்த்துபவரொவ்வொருவரும் தம்மிடம் வேலை பார்க்கும் தொழிலாளரொவ்வொருவருக்கும் போயா தினத்தை வாராந்தர விடு முறையாக அனுமதித்தல் வேண்டும். யாதாயினுமொரு வாரத்திற் போயா தினமில்லாதிருப்பின், அவ்வாரத்தில் யாதாயினுமொரு நாளை வாராந்தர விடுமுறையாக அவர் அனுமதித்தல் வேண்டும்.

எனினும், வேலைக்கமர்த்துபவரொருவர், பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய, எத்தொழிலாளிக்கும் வாராந்தர விடுமுறையொன்றில் வேலை கொடுக்கலாம்.

(1) அவ்வாராந்தர விடுமுறைக்கு நேரடுத்துவரும் ஆறு நாட்களுள் ஒரு நாள் அத்தொழிலாளிக்கு ஒரு விடுமுறையாக அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(2) அவ்வாராந்தர விடுமுறையிற் செய்த வேலைக்கு—

(அ) (ஒரு சாப்பாட்டுக்கு ஒரு மணி நேரமுட்பட) 9 மணி நேரத்திற்கு அல்லது வேலைக்கமர்த்துபவர் வேலை கொடுக்கத் தவறிய காரணத்தால் ஒன்பது மணி நேரத்திற்குக் குறைவான எக்காலத்திற்கும் வேலை செயத ஒரு தொழிலாளிக்கு ஒரு சாதாரண வேலை நாளுக்குரிய கீழெல் லைச் சம்பள வீதத்தின் $1\frac{1}{2}$ மடங்கு வேதனம் கொடுக்கப்பட வேண்டும்.

(ஆ) வேலை செய்ய விரும்பாமை காரணமாக (ஒரு சாப்பாட்டிற்கு ஒரு மணி நேரமுட்பட) 9 மணி நேரத்திற்குக் குறைவாக வேலை செய்த ஒரு தொழிலாளிக்கு, அவர் வேலை செய்த ஒவ்வொரு மணி நேரத்திற்கும், (ஒரு சாதாரண வேலை நாளுக்குரிய கீழெல்லைச் சம்பள வீதத்தை 8 ஆற் பிரிக்க வரும்) மணி நேர வீதத்தின் $1\frac{1}{2}$ மடங்கு வேதனம் கொடுக்கப்பட வேண்டும்.

(இ) (ஒரு சாப்பாட்டிற்கு ஒரு மணி நேரமுட்பட) 9 மணி நேரத்திற்கு அதிகமாக வேலை செய்த ஒரு தொழிலாளிக்கு, 9 மணி நேரத்திற்கு மேலதிகமாக அவர் வேலை செய்த ஒவ்வொரு மணி நேரத்திற்கும் (ஒரு சாதாரண வேலை நாளுக்குரிய கீழெல்லைச் சம்பள வீதத்தை 8 ஆற் பிரிக்க வரும்) மணிநேர வீதத்தின் இரு மடங்கு வேதனம் கொடுக்கப்பட வேண்டும் ; அத்துடன்

(ஈ) துண்டு வேலைக்குரிய தொழிலாளர் விடயத்தில், வாராந்தர விடுமுறை நாளொன்றிற்கு அத்தகைய தொழிலாளிக்கு கொடுபடும் வேதனமானது, ஒரு சாதாரண வேலை நாளில் அத்தகைய துண்டு வேலைக்குக் கொடுபடும் கீழெல்லைச் சம்பள வீதத்தின் ஒன்றரை மடங்கா யிருத்தல் வேண்டும்.

3. எக்காலத்திலும் வாராந்தர விடுமுறையிற் செய்த வேலைக்கு ஒரு தொழிலாளிக்குரிய வேதனம், சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 2 (ஆ)ம் பிரிவின்படி அக்காலத்திற்குச் சம்பளம் கொடுத்தற்கு விதிக்கப் பட்ட காலவெல்லையுள் கொடுக்கப்பட வேண்டும். எனினும், சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 25 ம் பிரிவின் கீழ் பிரகடனஞ் செய்யப்பட்ட அரசாங்க விடுமுறையொன்றில் வாராந்தர விடுமுறையொன்று வரும் பொழுது, அரசாங்க விடுமுறை அந்நாளிலும் வாராந்தர விடுமுறை அவ்விடுமுறைக்கு நேரடுத்துவரும் ஆறு நாட்களுள் ஒரு நாளிலும் கொடுக்கப்பட வேண்டும்.

இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகள் கால்நடை வளர்த்தலி லீடுபடும் தொழிலாளருக்கு இயைபுடையனவல்ல."

9–851

---

### இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை—1946
### பாராளுமன்றப் பொதுத் தேர்தல்—1970

**84 ஆம் இலக்க கிளிநொச்சி தேர்தற்றொகுதி அங்கத்தவரின் தெரிவு**

மேற்படி தேர்தல் அபேட்சகரான திரு. கே. ஏ. ஜெரேம் அவர்க ளின் தேர்தற் செலவினங்கள் பற்றிய அறிக்கையும் அவ்வறிக்கை யின் பொருட்டான உறுதியுரைகளும் 1970 யூன் மாதம் 30 ஆம் நாள் எனக்குக் கிடைத்தனவென்றும் அவ்வறிக்கையையும் உறுதி யுரைகளையும், இந்த அறிவித்தல் அரசாங்க வர்த்தமானியில் பிர சுரமாகும் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் கந்தோர் வேளை யில் எச்சமயத்திலேனும், தேர்தற் கந்தோரில் ஒரு ரூபாய் கட்ட ணம் செலுத்திப் பரிசோதிக்கலாமென்றும் 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச பேரவைக் கட்ட ளையின் 71(1) ஆம் பிரிவின் கீழ், இத்தால் அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது.

தேர்தற் கந்தோர், செ. நடராசா,
கச்சேரி, யாழ்ப்பாணம், உதவித் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்,
1970.9.10. தேர்தல் மாவட்டம் இல. 84—கிளிநொச்சி.

9–949

---

**சிறிய நீர்ப்பாய்ச்சல் வேலைகளைத் திருத்துவதற்கான திட்டம்**

1. வேலையின் பெயரும் விவரணமும் : கிரம்புல எல்ல L/12 (11.65 × 6.95)

2. இத்திட்டத்தின் கீழ் நீர்ப்பாய்ச்சக்கூடிய காணியின் தன்மையும் அளவும்—

தனியாருக்குச் சொந்தமான காணி : அண்ணளவான ஏக்கர் அளவு : 99

முடிக்குரிய காணி : அண்ணளவான ஏக்கர் அளவு : —

3. ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் :—

(1) கீழே தரப்பட்ட மிக முக்கியமான கட்ட வேலைகளை அதாவது

(அ) சிறு வெள்ளத்தடுப்புக் கட்டு மூன்று துவாரங்களுடனும் 5′ × 5′ தூக்கு கதவுகளுடனும்.

(ஆ) திருப்பு வாய்க்கால்.

(இ) கிரம்புல எல்ல கட்டை மூடுதல்.

மதிப்பிடப்பட்ட செலவாகிய ரூபா 80,000 வரைக்கும் அரசாங் கத்தால் மேற்கொள்ளப்பட்டுளளது.

(2) மேற் சொன்னவாறு அரசாங்கம் பொறுப்பேற்றமைக்குக் கைம்மாறாக காணித்துண்டு பெற்றவரும் குடிநில உரிமையுள்ள விவசாயிகளும் அல்லது எக்காணியிலும் காணி பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயிகளோ இல்லாதவிடத்து அக்காணி களின் சொந்தக்காரர்கள், இக் கட்ட வேலைகள் முடிந்ததன்பின் எதுவித வேதனமுமின்றி இவற்றைப் பேணுவதற்கும் திருத்து வதற்குமான கூலியாவர்களைக் கொடுத்துதவ வேண்டும்.

(3) இத்திட்டத்தின் கீழ் தங்கள் பங்கைச் செலுத்துவதில் காணித் துண்டு பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயியோ, இவர்க ளில்லாதவிடத்துக் காணியின் சொந்தக்காரரோ தவறுவாராயின் இப்படியான வேலையை வேறு ஒருவரைச் செய்ய அரசாங்க அதிபர் பணித்து இதனால் ஏற்படும் செலவினை இக்கட்டளைச்சட்டத்தின் VII ஆம் பாகத்தில் குறிப்பிட்டுள்ளவாறு [illegible].

9–830

---

## அரசாங்க பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்த) செய் சட்டத்தினுல் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டம் (அதிகாரம் 453)

கமநலச்சேவை ஆணையாளர் செனவிரத்ன பண்டா செனநாயக்கா ஆகிய நான் 1968 ஆம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சல் (திருத்த) 48 ஆம் இலக்கச் செயசட்டத்திருல் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டம் அதிகாரம் 453 இன் (இலங்கைச் சட்டவாக்கங்கள்)படி கொழும்பு அரசாங்க அதிபரால் 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்தம்) செய்சட்டத்தின் 17 ஆம் பிரிவினுல் திருத்தப்பட்டபடியான மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் தயாரிக் கப்பட்டதும் கீழ்க் குறிக்கப்பட்டிருப்பதுமான திட்டம் என்னுல் அங்கீ கரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

செ. ப. செனநாயக்கா,
கமநல்ச்சேவை ஆணையாளர்.

1970 ம் ஞு ஓகத்து மீ 11 ந் வ.

---

### கமத்தொழிற் சேவைப் பகுதி (உத்தரவாத விலைத்திட்டம்) வருடாந்த கணக்கெடுப்பதற்காக பண்டகசாலைகள் மூடப்படுதல்—1969–70

கமத்தொழிற் சேவை இலாகாவின் உத்தரவாதவிலைத்திட்ட பண்டக சாலைகள் அனைத்தும் 1.10.70, 2.10.70 ஆகிய இரு திகதிகளிலும் மூடப் படும்.

2. மேற்குறிப்பிட்ட நாட்களில் பண்டகசாலைகளிற் சேரக்கூடியதாக பொருள்களை அனுப்பவோ அல்லது கொண்டு செல்லவோ வேண்டா மென்று கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கங்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. பொருள் களைக் கொடுத்தல் அல்லது அனுப்புதல் 3.10.70 ல் இருந்து அல்லது அதன்பின்பு ஆரம்பிக்கலாம்.

சி. வி. உனம்புவ,
கமத்தொழிற் சேவை பிரதி ஆணையாளர்.

கமத்தொழிற் சேவை இலாகா,
த. பெ. இல. 1429,
கொழும்பு 7.

9–842

---

### 1964 ம் ஆண்டின் கம்பெனிகள் (பரிசோதகர்) பிரமாணத்தின் கீழ் 7(ஏ), 7(பி) பகுதிகள் பிரகாரம் 1969–70 ம் வருடகாலத்தில் பதியப்பட்ட பரிசோதகர்களின் மேலதிக நிரல்

| பெயரும் விலாசமும் | பங்காளிகளின் பெயர்கள் |
|---|---|
| எஸ். ஜீ. மகேந்திரன் அன் கம்பனி, 258/14, டாம் வீதி, கொழும்பு 12 .. | சுப்பையா கோபாலபிள்ளை மகேந்திரன் |
| அபயசிறிவாதன செல்வேந்திரா, அன் கம்பனி, 100, குமாரன் ரட்ணம் ரோட், கொழும்பு | தெமுணி எறிக் டக்லஸ் டீ சொய்சா அபயசிறிவாதனவும் சபாரட்ணம் செல்வேந்திராவும் |
| எம். குமாரசாமி அன் கம்பனி, 108, பராக்கிரம ரோட், கொழும்பு 14 .. | மயில்வாகனம் குமாரசாமி |
| விக்ரர் அன் கம்பனி, 89, பிறின்ஸ் வீதி, கொழும்பு 11 .. | விக்ரர் ரட்ணம் விஜயரட்ணம் |
| அலெக் மாட்டின் அன் கம்பனி, 70½, சதாம் வீதி, கொழும்பு 1 .. | மைக்கேல் யோன் அலெகம், யோன் ஸ்ரேஸ் டன்ஸ்ரன் மாட்டினும் |
| மனோகரனும் சங்கக்கராவும், 44⅔, வை. எம். பீ. ஏ. கட்டடம் கொழும்பு 1 .. | முத்தையா மனோகரனும், சங்கக்கரா முதியன்சலாகே அமரகுமார சங்கக்கராவும் |

1964 ம் ஆண்டின் கம்பனிகள் (பரிசோதகர்கள்) பிரமாணங்களின் கீழ் 5(1)(ஏ) பகுதியின் பிரகாரம் 1969/70 ம் வருடகாலத்தில் பதியப்பட்ட பரிசோதகர்களின் மேலதிக நிரல்

| பெயர் | வியாபார விலாசம் |
|---|---|
| காளிதாஸ் இராமையா | 43, திருகோணமலை வீதி, கண்டி |
| மகேந்திரன், சுப்பையா கோபாலபிள்ளை | 258/14, டாம் வீதி, கொழும்பு 12 |
| செல்வேந்திரா சபாரட்ணம் | 100, குமாரன் ரட்ணம் ரோட், கொழும்பு 2 |
| விஜயரட்ணம், விக்ரர் ரட்ணம் | 5/1, அறுத்தூசா ஒழுங்கை, கொழும்பு 6 |

1964 ம் ஆண்டின் கம்பனிகள் (பரிசோதகர்கள்) பிரமாணங்களின் கீழ் 5(1)(பி), 5(1)(டீ) பகுதிகளின் பிரகாரம் 1969/70 ம் வருடகாலத்தில் பதியப்பட்ட பரிசோதகர்களின் மேலதிக நிரல்

| பெயர் | வியாபார விலாசம் |
|---|---|
| ரி. டீ. விஜயரட்ண | 15, பெப்பின் ஒழுங்கை, கொழும்பு 4 |
| திருமதி ஈ. எல். கே. ஐ. எக்கநாயக்க | 265/4, டவத்தகாகவத்தை, மிரிகமா ரோட், நீர்கொழும்பு |
| எஸ். எம். கனகரத்தினம் | 42, அறுத்தூச ஒழுங்கை, கொழும்பு 6 |
| எஸ். ஏ. காணிவேல் | 39, பரலல் ரோட், இரத்மலானை |
| பி. கணபதிப்பிள்ளை | 21, 33 ம் ஒழுங்கை, வெள்ளவத்தை |
| நடேசபிள்ளை அன் கம்பனி | 68, சீ–பீச் ரோட், கொழும்பு 11 |
| வெற்றிவேலு குமாரசிங்கம் | 7, ஷிறெக்கறீஸ் பிளேஸ், கொழும்பு 6 |

ஜே. எவ். பொன்னம்பலம்,
கம்பனிகள் பதிவாளர்.

கொழும்பு 1,
1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 7 ந் உ.

9–834

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28. 8.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 11 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.